செ.வெ.எண்:14 நாள்.06.04.2025

# பத்திரிகைச்செய்தி.

கரூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்படும் அங்கன்வாடி (குழந்தைகள்) மையங்களில் காலியாக உள்ள 3 முதன்மை அங்கன்வாடி பணியாளர் 14 குறு அங்கன்வாடிப் பணியாளர் ,மற்றும் 44 அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட உள்ளன. கரூர் மாவட்டத்தில் நேரடி நியமனம் செய்யப்படவுள்ள முதன்மை அங்கன்வாடி பணியாளர் , குறு அங்கன்வாடி பணியாளர், மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் இனசுழற்சி விவரம் மாவட்ட திட்ட அலுவலகத்திலும் அந்தந்த வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களிலும் தகவல் பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை www.icds.tn.gov.in என்ற இணையதளத்தில் மட்டுமே பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இப்பணியிடங்களுக்கு 25.04.2025 தேதி மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பம் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

ஊதிய விவரம்

தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்யப்படும் முதன்மை அங்கன்வாடி பணியாளர் , குறு அங்கன்வாடி பணியாளர், மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் தொடர்ந்து பன்னிரெண்டு மாத காலம் (ஓராண்டு) பணியினை முடித்த பின் அவர்கள் சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் ஊதியம் வழங்கப்படும்.

| ஊதிய விவரம் | அங்கன்வாடி பணியாளர் | குறு அங்கன்வாடி பணியாளர் | அங்கன்வாடி உதவியாளர் |
|---|---|---|---|
| தொகுப்பூதியம் மாதமொன்றுக்கு | ரூ 7700/- (ஏழாயிரத்து எழுநூறு மட்டும்) | ரூ5700/- (ஐய்யிரத்து எழுநூறு மட்டும்) | ரூ4100/- ( நான்காயிரத்து நூறு மட்டும்) |
| பன்னிரெண்டு மாதம் (ஓராண்டு) காலத்திற்கு பின் வழங்கப்படும் சிறப்பு காலமுறை ஊதியம் மாதமொன்றுக்கு | ரூ 7700 - 24200 என்ற ஊதிய விகிதம் | ரூ5700 - 18000 என்ற ஊதிய விகிதம் | ரூ4100 - 12500 என்ற ஊதிய விகிதம் |

## விண்ணப்பிக்க தகுதிகள்

இப்பணியிடங்களுக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவர்.

| வ,எண் | பணி | முதன்மை அங்கன்வாடிப் பணியாளர் / குறு அங்கன்வாடிப் பணியாளர் | அங்கன்வாடி உதவியாளர் |
|---|---|---|---|
| 1 | கல்வி | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 2 | தமிழ் சரளமாக எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும் | | |
| 3 | வயது நிர்ணயம் 01.04.2025 நாளின் படி கணக்கிடப்பட வேண்டும். | 25 முதல் 35 வயதுவரை விதவை/, ஆதரவற்ற பெண்கள் , கணவனால் கைவிடப்பட்டவர்கள் ,/எஸ்சி, எஸ்.சி(அ) /எஸ்டி வகுப்பினர் வயது 25 முதல் 40 வரை<br><br>மாற்றுத்திறனாளிகளுக்கு 25 முதல் 38 வயது வரை (35 + 3 =38) | 20 முதல் 40 வயதுவரை விதவை , ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ,/எஸ்சி, எஸ்.சி(அ) /எஸ்டி வகுப்பினர் வயது 20 முதல் 45 வரை<br><br>மாற்றுத்திறனாளிகளுக்கு 20 முதல் 43 வயது வரை (40 + 3 =43) |
| 4 | தூரச் சுற்றளவு | விண்ணப்பதாரர்கள் காலிப்பணியிடங்களை நிரப்ப அறிவிக்கப்பட்டுள்ள கிராமங்களிலுள்ள குழந்தைகள் மையம் அமைந்துள்ள அதே கிராமத்தை சேர்ந்தவ,ர் அதே கிராம ஊராட்சிக்குட்பட்ட பிற கிராமத்தைச் சேர்ந்தவர் ,அந்த கிராம ஊராட்சி எல்லையின் அருகிலுள்ள அ டுத்த கிராம ஊராட்சியை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். | |
| | | விண்ணப்பதாரர்கள் காலிப்பணியிடங்களை நிரப்ப அறிவிக்கப்பட்டுள்ள மாநகராட்சி, நகராட்சி, மற்றும் நகர பஞ்சாயத்துகளிலுள்ள குழந்தைகள் மையம் அமைந்துள்ள அதே வார்டு அல்லது அருகிலுள்ள வார்டு அல்லது மையம் அமைந்துள்ள வார்டின் எல்லையை பகிர்ந்து கொள்ளும் வார்டைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். | |

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து காலிப்பணியிட அங்கன்வாடி ( குழந்தை) மையம் அமைந்துள்ள வட்டாரக் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டு,ம். விண்ணப்பத்துடன் பள்ளி மாற்றுச் சான்றிதழ் மதிப்பெண் சான்றிதழ்கள், , குடும்ப அட்டை / ஆதார் அட்டை ,சாதிச்சான்று, வாக்காளர் அடையாள அட்டை, ஆகிய சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட (Self Attested) நகல்கள் இணைக்கப்படவேண்டும். விதவை, கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற பெண், (தாய்/ தந்தை இறப்புசான்று) மற்றும் மாற்றுத்திறனாளிகள் அதற்கான சான்றிதழ்களின் நகல்களையும் சான்றொப்பமிட்டு (Self Attested) இணைக்க வேண்டும். நேர்காணலின் போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும் .

**குறிப்பு; 07.04.2025 அன்று செய்தித்தாள் பிரசுரம் செய்யப்படவேண்டும்.**

**வெளியீடு. செய்திமக்கள்தொடர்புஅலுவலர், கரூர் மாவட்டம்.**